# விவேகசிந்தாமணி

# பாடல்கள்

**பாடல்: 1 (அல்லல்போம்)**

அல்லல்போம் வல்வினைபோம் மன்னைவயிற்றிற் பிறந்த

<<>> அல்லல் போம் வல்வினை போம் அன்னை வயிற்றில் பிறந்த

தொல்லைபோம் போகாத் துயரம்போம்- நல்ல

<<>> தொல்லை போம் போகாத் துயரம் போம் - நல்ல

குணமதிக மாமருணைக் கோபுரத்துச் செல்வக்

<<>> குணம் அதிகம் ஆம் அருணைக் கோபுரத்துச் செல்வக்

கணபதியைக் கைதொழுதக் கால்.

<<>>கணபதியைக் கை தொழுதக் கால்.

அருஞ்சொற்பொருள்

அல்லல்- துன்பம்; வல்வினை- வலிமைபொருந்திய வினைகள் (கர்மா);அன்னை- தாய், அம்மா; அருணை- திருவண்ணாமலை; தொழுதக்கால்- வணங்கியபோது, வணங்கினால்.

கருத்துரை

கணபதியைக் கையால் கும்பிட்டால் நம் துன்பங்கள்(அல்லல்) மறைந்துபோகும். வலிமைமிக்க் வினைகள் (கர்மவினை) அழ்ந்து போகும். தாய்வயிற்றிற் பிறந்த பிறப்பு எனும் துன்பம் அழிந்துபோகும் (மீண்டும் மீண்டும் பிறந்து துன்புறும் பிறவாநெறி கிடைக்கும் என்றுபொருள்). என்றும் மறைந்துபோகாத துயரங்கள் நீங்கும். நல்ல குணம்(நற்பண்புகள்) ஓங்கிவளரும், அருணாசலத்தின் கோபுரத்தில் எழுந்தருளியுள்ள செல்வக்கணபதியை-செல்லபபிள்ளையாரை-கையெடுத்துக்கும்பிட்டால்.

விளக்கம்

இங்கு நூலின்முதலில் வழக்கமாகச் சொல்லும் கடவுள் வாழ்த்தில் பிள்ளையாரைக் கும்பிட்டால் என்னென்ன பலன்கள் நமக்குக் கிட்டும் என்கின்றார். ஒரு செயலைச் செய்யப் புகுமுன் கடவுளைக் கும்பிட்டுத் தொடங்குவது நம் தமிழ்மரபு. எனவே, முதல் தெய்வமாகிய கணபதியை- ஐந்துகரத்தனைத் தொழுகின்றார்.நம்மையும் தொழும்படி கூறுகின்றார்.

## பாடல்: 2 (ஆபத்துக்குதவாப்)

ஆபத்துக் குதவாப் பிள்ளை அரும்பசிக் குதவா அன்னம்
தாபத்தைத் தீராத் தண்ணீர் தரித்திரம் அறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்கா வேந்தன் குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தைப் போக்காத் தீர்த்தம் பயனிலை ஏழும் தானே.

ஆபத்துக்கு உதவாப் பிள்ளை, அரும்பசிக்கு உதவா அன்னம்

தாபத்தைத் தீராத் தண்ணீர், தரித்திரம் அறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்கா வேந்தன், குருமொழி கொள்ளாச் சீடன்,
பாபத்தைப் போக்காத் தீர்த்தம் பயனிலை ஏழும் தானே.

அருஞ்சொற்பொருள்

அன்னம்- உணவு; தாபத்தை- தாகத்தை; தீரா- தீர்க்காத; வேந்தன்- அரசன்; சீடன்- மாணாக்கன்; பயனிலை- பயன்+இல்லை.

கருத்துரை

ஆபத்தில் உதவிசெய்யாத பிள்ளையால் பயனில்லை. மிகுந்த பசியில் தவிக்கும்போது உதவாத உணவினால் ஒருபயனுமில்லை. தாகமுற்று இருக்கும்போது அதனைத் தவிர்க்க உதவாத தண்ணீரால் என்னபயன்? ஒருபயனுமில்லை. வறுமையை அறியாத, அறிந்து அதற்கேற்றபடி ஒழுகாத - நடக்காத- பெண்களால் பயன் இல்லை. கோபத்தை அடக்காத அரசனாலும் பயனில்லை. குருவின்மொழியை -ஆசிரியரின் சொல்லை- கேளாத மாணாக்கனாலும் ஒருபயனுமில்லை. அதுபோலத் தன்னுள் முழுகுவாரின் பாவத்தைப்போக்காத தீர்த்தத்தினாலும் பயனில்லை. இவ்வாறாக இந்த ஏழும் பயனில்லை என்கின்றார்.

விளக்கம்

ஆபத்துக்காலத்தில் தன்பிள்ளையே தனக்கு உதவாவிட்டால் பின் யார் உதவுவார்கள், எனவே ஆபத்துக்காலத்தில் உதவாத பிள்ளையால் ஒருபயனும்

இல்லை என்பதாம். பசியைத் தீர்த்துக்கொள்ளத்தான் உணவு உண்கின்றோம் ஆனால், அப்பசியைப் போக்காத உணவால் என்னபயன்? தாகத்தைப் போக்காத தண்ணீரால் என்னபயன்? வீட்டிலுள்ள பெண்கள், குறிப்பாக மனைவி, குடும்பத்தின் வறுமையை அறிந்து அதற்கேற்பச் செலவு செய்யவேண்டும். குடும்பத்தின் நிலை அறியாது ஆடம்பரமான வீண்செலவுகளைச் செய்பவளாக இருந்தால் அப்படிப்பட்ட பெண்களால் அந்தக் குடும்பத்திற்கு என்ன பயன்? அரசன் எல்லா அதிகாரங்களைப்பெற்றிருந்தாலும், அவன் கோபத்தைஅடக்கக் கற்றிருக்கவேண்டும். அவன் கோபத்தை அடக்காவிட்டால் அவன் கீழ் இருப்பவர்க்ளுக்குத் துன்பந்தான். எனவே கோபத்தை அடக்காத வேந்தனும் வீணே. குருவின் உபதேசத்தின்படி சீடன் -மாணாக்கன்- நடந்துகொள்ளவேண்டும். அவ்வாறு இல்லையெனில், அச்சீடன் வீணானவன்தான். தீர்த்தம் ஆடுவது பாவத்தைப் போக்கிக்கொள்ளத்தான், ஆனால் அந்தத் தீர்த்தத்தில் ஆடியும் பாவம் தீரவில்லையென்றால், தீர்த்தமே வீண்தான். இவ்வாறு பிள்ளைமுதல் தீர்த்தம் ஈறாக உள்ள ஏழுபொருள்கள் இருந்தும் பயனில்லை என்கின்றார்.

## பாடல்:3 (பிள்ளைதான்)

பிள்ளைதான் வயதில் மூத்தால் பிதாவின் சொற்புத்திக் கேளான்
கள்ளின்நற் சொல்லாள் மூத்தால் கணவனைக் கருதிப் பாராள்
தெள்ளற வித்தை கற்றால் சீடனும் குருவைத் தேடான்
உள்ளநோய் பிணிகள் தீர்ந்தால் உலகர்பண் டிதரைத் தேடார்.

பிள்ளைதான் வயதில் மூத்தால் பிதாவின் சொல் புத்திக் கேளான்
கள்ளின் நல்சொல்லாள் மூத்தால் கணவனைக் கருதிப் பாராள்
தெள் அற வித்தை கற்றால் சீடனும் குருவைத் தேடான்
உள்ள நோய் பிணிகள் தீர்ந்தால் உலகர் பண்டிதரைத் தேடார்.

அருஞ்சொற்பொருள்

பிதா= தந்தை; கள்= தேன்; தெள்= தெளிவாக; வித்தை- கல்வி; சீடன்- மாணவன்; பண்டிதர்= மருத்துவர்.

கருத்துரை

குடும்பத்தில் பிள்ளைக்கு வயது அதிகமாகிவிட்டால், அவன் தந்தையின் சொல்லையும் அவர்கூறும் புத்திமதியையும் கேட்கமாட்டான். 'தோளுக்கு மிஞ்சினால் தோழன்' என்பது பழமொழி. தேன்போன்ற இனிமைமிகுந்த சொல்லாளாகிய மனைவி, அதாவது கணவனிடம் இதுநாள்வரை இனிமையாகப் பேசிய மனைவியும், அவனுக்கு வயது முதிர்ந்தால் அவனைக் கருதியும் பார்க்கமாட்டாள். குருவிடம் தெளிவாக

அனைத்தையும் கற்றுக்கொண்டுவிட்டான் என்றால், அந்த மாணவனும் குருவைத் தேடமாட்டான். தமக்குள்ள நோய்கள் எல்லாம் தீர்ந்து போனால் உலகத்திலுளளார் மருத்துவரைத் தேடமாட்டார்கள்.

விளக்கம்

உலகில் நாம் பார்ப்பதுதான், பிள்ளையின் வயது அதிகமாகிவிட்டால் அவன் தாய் தந்தையர் பேச்சை, புத்திமதியைக்கேட்பதில்லை. கணவனுக்கு வயது முதிர்ந்துவிட்டால் மனைவியும் கணவனைக் கருத்திற் கொள்வதில்லை, பேரன்பேத்திகள்மேல்தான் அவளின் முழுக்கவனமும். அதுபோல் தெளிவாக எல்லா வித்தைகளையும் -கல்வியையும்- கற்றுவிட்டால் அந்த மாணவன் குருவைத்தேடுவதில்லை. உலகில் இருப்போர், தம் நோய்நொடி தீர்ந்துபோனால் அவர்கள் மருத்துவரை ஏறிட்டும் பார்ப்பதில்லை. இதுதான் உலகஇயல்பு என்கின்றார்.

## பாடல்:4 (குக்கலைப்)

குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டினி லடைத்து வைத்து
மிக்கவே மஞ்சள் பூசி மிகுமணம் செய்தா லுந்தான்
அக்குலம் வேற தாமோ அதனிடம் புனுகுண் டாமோ
குக்கலே குக்கல் அல்லாற் குலந்தனிற் சிறந்த தாமோ

குக்கலைப் பிடித்து நாவிக் கூண்டினில் அடைத்து வைத்து
மிக்கவே மஞ்சள் பூசி மிகு மணம் செய்தாலும் தான்
அக்குலம் வேறதாமோ அதனிடம் புனுகு உண்டாமோ

குக்கலே குக்கல் அல்லால் குலம் தனில் சிறந்ததாமோ.

அருஞ்சொற்பொருள்

குக்கல்- தெருநாய்; நாவி- புனுகுப்பூனை

கருத்துரை

தெருநாயைப் பிடித்துப் புனுகுப்பூனையை அடைக்கவேண்டிய கூண்டினில் அடைத்து வைத்து அதற்குத் தினந்தோறும் அதிகமான மஞ்சளைப்பூசி மிக்க மணமுடையதாக அதனை ஆக்கினாலும், அந்நாயானது வேறாக ஆகிடுமோ? அதாவது புனுகுப்பூனையாக ஆகுமோ? அதனிடத்தில் மணம்மிகுந்த வாசனைப்பொருளான 'புனுகு' உண்டாகுமா? நாய் என்றும் நாய்தான், அது என்றும் உயர்ந்த புனுகுப்பூனை ஆகாது என்று அறியவும். அததற்கு உள்ள இயல்புதான் வரும் என்பதாம்.

விளக்கம்

இங்கு ஒன்றன் இயல்பை மாற்றுதல் என்பது இயலாது என்கின்றார். உதாரணமாகப் புனுகுப்பூனைக்குப்பதிலாக தெருநாயைக் கூண்டினில் அடைத்து வைத்து அதற்கு மணப்பொருள் எல்லாம் பூசிப்பேணினாலும் அது வாசனைநிறைந்த புனுகினைத் தருமா? தராது. அதன் இயல்பு அதுதான். இங்குக் குலம் என்பது அந்த இனவிலங்கு என்ற பொருளில் வந்தது. சாதி எனப்பொருள் கொள்ளல்தவறு.

புனுகு என்பது வாசனைப்பொருள், மக்கள் விரும்பிப் போற்றுவது. அது புனுகுப்பூனையிடமிருந்து கிடைப்பது.

அதனைப்பெற வேண்டி அதனை இரும்புக்கூண்டினுள் அடைத்து வைத்து அதனைப்பெறுவர்.

## பாடல்:5 (ஒப்புடன்முகமலர்ந்தே)

ஒப்புடன் முகம லர்ந்தே வுபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட் டாலு முண்பதே யமிழ்த மாகும்
முப்பழ மொடுபா லன்னம் முகங்கடுத் திடுவா ராயின்
கப்பிய பசியி னோடு கடும்பசி ஆகுந் தானே.

ஒப்பொடு முகம் மலர்ந்தே உபசரித்து உண்மை பேசி
உப்பு இலாக் கூழ் இட்டாலும் உண்பதே அமிழ்தம் ஆகும்
முப்பழமொடு பால் அன்னம் முகம் கடுத்து இடுவார் ஆயின்
கப்பிய பசியினோடு கடும் பசி ஆகும் தானே.

அருஞ்சொற்பொருள்

ஒப்பொடு- மனம் ஒப்பி; கூழ்- கம்பு, கேழ்வரகுக் கூழ்; அமிழ்தம்- அமிர்தம்; அன்னம்- சோறு; கடுத்து- கடுகடு வென்று; கப்பிய- பிடித்த

கருத்துரை

மனம் நன்கு ஒப்பி முகமலர்ச்சியுடன் உபசரித்து உண்மையாகமனம் பொருந்தி இனிமையாகப்பேசி, உப்புக்கூட இல்லாத கூழ் உணவைப்பரிமாறினாலும் அதுதான் அமிழ்தம் ஆகத்தோன்றும். அதற்குமாறாக, வாழை மா பலா முதிலிய இனிய கனிகளோடு, பாற் சோறு முதலியவற்றைக் கடுகடுப்பாக முகத்தை வைத்துக்கொண்டு உணவு இட்டால், முன்பே பிடித்த

பசியோடு மேலும் அதுகடுமையான பசியினையே கொடுக்கும். பசி அதிகமாகும் என்பதாம்.

விளக்கம்

இங்கு, விருந்து ஓம்பும் முறையினைக்கூறுகின்றார். கொடுப்பது கூழாக இருந்தாலும், ஏன்...? அது உப்புக்கூட இல்லாத கூழாயிருந்தாலும், மனமொப்பி முகமலர்ச்சி பொங்க உண்மையான அன்போடும் நல்ல மனதோடும் அக்கூழ் உணவைஇட்டால் அதுவே அமுதம். அதற்குமாறாக மூன்று வகையான பழங்களோடு, பாற்சோற்றை விருந்தாகப் படைத்தாலும் கடுகடுத்த முகததோடு விருப்பமின்றிக் கொடுப்பின் அது பசியை மேலும் அதிகரிக்கவே செய்யும். எனவே, விருந்துஓம்பலில் உணவுப்பொருளைவிட அதைப்பரிமாறுவோரின் மனமே முக்கியம்.

## பாடல்:6 (கதிர்பெறுசெந்நெல்)

கதிர்பெறு செந்நெல் வாடக் கார்குலம் கண்டும் சென்று
கொதிதிரைக் கடலில் பெய்யும் கொள்கைபோல் குவல யத்தே
மதிதனம் படைதத பேர்கள் மறுகுவோர் முகத்தைப் பாரார்
நிதிமிகப் படைததோர்க் கீவார் நிலையிலார்க் கீய மாட்டார்.

மேகக் கூட்டம் நெற்பயிர்கள் வாடுவதைக் கண்டும் அப்பயிரிடையே மழையைப் பொழியாமல், அலைகள் வீசும் சமுத்திரத்தில் சென்று பெய்யும். அது போல நிறைந்த

செல்வம் படைத்த செல்வந்தர், வறுமையால் வாடுபவர் முகத்தைப் பார்த்தும் அவருக்கு உதவமாட்டார். மிகுதியாகச் செல்வம் படைத்தவர்க்கே அளிப்பார்கள்.

## பாடல்: 7 (ஆலிலைபூவும்)

ஆலிலை பூவும் காயும் அளிதரும் பழமும் உண்டேல்
சாலவே பட்சி எல்லாம் தம்மிலம் என்றே வாழும்
வாலிபம் வயோதி கம்பல் விலங்கினம் கூடச் சேரும்
ஆலிலை ஆதி போனால் அதனடி இருப்பார் உண்டோ.

## பாடல்: 8 (பொருட்பாலை)

பொருட்பாலை விரும்புவர் காமப்பாலில் மூழ்கிப் புரள்வர் கீர்த்தி
அருட்பாலாம் அறப்பாலைக் கனவிலுமே விரும்ப அறிவொன் றில்லார்
குருப்பால் கடவுளர்பால் வேதியர்பால் இரவலர்பால் கொடுக்கக் கோரார்
செருப்பாலே யடிப்பவர்ககே விருப்பமுடன் கோடிப்பொன் கும்பிட் டீவாரே.

## :பாடல்: 9 (தண்டாமரையுடனே)

தண்டாமரையுடனே பிறந்தும் தண்டேன் நுகரா மண்டுகம்
வண்டோ கானத் திடையிருந்தும் வந்தே கமல மதுவுண்ணும்
பண்டே பழகி இருந்தாலும் புல்லர் அறியார் நல்லோரை

கண்டே களித்துட னுறவாடிக் கலப்பார் தம்முள் கற்றோரே

இந்த செய்யுள் பொருள் தாமரை குளத்தில் விதை விழுந்து முளைக்கிறது அதே போன்று ஒரு தவளையும் வளர்கிறது தினமும் அந்த தாமரையின் மேல் ஏறி விளையாடும் தூங்கும் அந்தத் தவளையும் பெரிதாகிவிட்டது தாமரையும் பெரிதாகி பூத்து விட்டது ஆனால் அந்த தவளைக்கு தாமரைப்பூவில் தேன் இருக்கும் ஈன்று தெரியாது ஆனால் எங்கேயோ தூரத்தில் உள்ள வண்டுக்கு தெரியும் தாமரை பூவில் தேன் இருக்கும் ஏன்று அதுவந்து தேன் குடித்துவிட்டு செல்லும் அதுபோல கற்றவர்கள் கூடவே இருப்பார்கள் ஆனால் அவர்களைப்பற்றி அறியாமல் அவர்கள் உடைய அறிவை பெறாமல் இருப்பார்கள் ஆனால் எங்கு இருந்தோ அறிவுள்ளவர்களை அறிந்து அவர்கள் அறிவைப்பெற்று செல்வார்கள்

மண்டூகம் = தவளை கமலம் = தாமரை நுகரா = தெரியாமல் (அறியாமல்)

## பாடல்: 10 (வானரம் மழைதனில்)

வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்
தானொரு நெறிசொலத் தாவிப் பிய்த்திடும்
ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடில் இடர தாகுமே.

## பாடல்: 11 (கற்பகத்)

கற்பகத் தருவைச் சார்ந்த காகமும் அமுத முண்ணும்

விற்பன் விவேக முள்ள வேந்தனைச் சேர்ந்தோர் வாழ்வர்
இப்புவி தன்னி லென்று மிலவு காத்திடும் கிளிபோ
லற்பரைச் சேர்ந்தோர் வாழ்தல் அரிதரிதரி தாகு மம்மா.

> கற்பகத் தருவைச் சார்ந்த காகமும் அமுதம் உண்ணும்
> விற்பன் விவேகம் உள்ள வேந்தனைச் சேர்ந்தோர் வாழ்வர்
> இப்புவி தன்னில் என்றும் இலவு காத்திடும் கிளிபோல்
> அற்பரைச் சேர்ந்தோர் வாழ்தல் அரிது அரிது ஆகும் அம்மா.

## பாடல்: 12 (ஆலகால)

ஆல கால விடத்தையும் நம்பலாம் ஆற்றை யும்பெருங் காற்றையும் நம்பலாம்
கோல மாமத யானையை நம்பலாம் கொல்லும் வேங்கைப் புலியையும் நம்பலாம்
கால னார்விடு தூதரை நம்பலாம் கள்ளர் வேடர் மறவரை நம்பலாம்
சேலை அகட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று தயங்கித் தவிப்பரே.

## பாடல் 13 (சங்குவெண்தாமரைக்கு)

சங்குவெண் டாம ரைக்குத் தந்தைதா யிரவி தண்ணீர்
அங்கதைக் கொய்து விட்டா லழுகிட வந்நீர் கொல்லும்
துங்கவெண் கரையிற் போட்டாற் சூரியன் சுட்டுக் கொல்வான்
தங்களி னிலைமை கெட்டாற் றவிப்பரே, திணறு வாரே.

## பாடல்: 14 (நாய்வாலை)

நாய்வாலை அளவெடுத்துப் பெருக்கித் தீட்டி நற்றமிழை எழுதஎழுத் தாணி யாமோ
பேய்வாழும் சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளிப் பெரியவிளக் கேற்றிட்டால் வீட தாமோ
தாய்வார்த்தை கேளாத சகசண் டிக்கென் சாற்றிடினு முலுத்தகுணம் உதிர்ந்து போமோ
ஈவாரை ஈயவிடான் இவனும் ஈயான் எழுபிறப் பினும்கடை யாமிவன் பிறப்பே.

## பாடல்: 15 (வெம்புவாள்)

வெம்புவாள் விழுவாள் பொய்யே மேல்விழுந் தழுவாள் பொய்யே
தம்பலம் தின்பாள் பொய்யே சாகிறேன் என்பாள் பொய்யே
அம்பினும் கொடிய கண்ணாள் ஆயிரம் சிந்தையாளை

நம்பின பேர்கள் எல்லாம் நாயினும் கடையா வாரே.

## பாடல்: 16 (கர்ப்பத்தால்)

கர்ப்பத்தால் மங்கையர்க் கழகு குன்றும் கேள்வியிலா அரசனெனில் ஆட்சி குன்றும்
துர்ப்புத்தி மந்திரியால் அரசுக் கீனம் துடிப்பில்லாப் பிள்ளைகளால் குலத்துக் கீனம்
நற்புத்தி கற்பித்தால் அற்பர் கேளார் நன்மைசெயத் தீமையினை நயந்து செய்வார்
அற்பரோ டிணங்கிவிடின் பெருமை தாழும் அரியதவம் கோபத்தா லழிந்து போகும்.

## பாடல்: 17 (தன்னுடன்)

தன்னுடன் பிறவாத் தம்பி தனைப்பெறாத் தாயார் தந்தை
அன்னிய ரிடத்துச் செல்வம் அருபொருள் வேசி நேசம்k
எண்ணிடா ஏட்டின் கல்வி எதிருரை மனையாள் வாழ்க்கை
இன்னவாம் எட்டும் சாரும் இடுக்கத்துக் குதவா தன்றே.

## பாடல்: 18 (கருதியநூல்)

கருதியநூல் கல்லாதான் மூட னாவான் கணக்கறிந்து பேசாதான் கசட னாவான்
ஒருதொழிலும் இல்லாதான் முகடி யாவான் ஒன்றுக்கும் உதவாதான் சோம்ப னாவான்
பெரியோர்கள் முன்நின்று மரத்தைப் போலப் பணியாமல் இருப்பவனோ பேய னாவான்
பரிவேபோல் தழுவுபவன் பசப்பனாவான் பசிப்பவருக் கிட்டுண்ணான் பாவி யாமே.

## பாடல்: 19 (தாங்கொணா)

தாங்கொணா வறுமை வந்தால் சபைதனில் சொல்ல நாணும்
வேங்கைபோல் வீரம் குன்றும் விருந்தினர் காணக் கூசும்
பூங்கொடி மனையாட் கஞ்சும் புல்லருக் கிணங்கச்செய்யும்
ஓங்கிய அறிவு குன்றும் உலகெலாம் பழிக்குந் தானே

## பாடல்: 20 (அரும்புகோணிடில்)

அரும்பு கோணிடில் அதுமணம் குன்றிடா
கரும்பு கோணிடில் கட்டியும் பாகுமாம்
இரும்பு கோணிடில் யானையை அடக்கலாம்
நரம்பு கோணிடில் நாமதற் கென்செய்வாம்.

பார்க்க

விவேக சிந்தாமணி 21-40

# மேலும்

- விவேக சிந்தாமணி - மூலம். அனைத்துப் பாடல்களும்.

[[]] :[[]] :[[]] :[[]] :[[]] :[[]]

# விவேகசிந்தாமணி - பாடல்கள் 21-40

## பாடல்: 21 (பொன்னொடுமணி)

பொன்னொடு மணியுண்டானால் புலையனுங் கிளைஞனென்பான்
தன்னையும் புகழ்ந்து கொள்வான் தகுதியில் மணமுஞ் செய்வான்
மன்னரா யிருந்த பேர்தான் மாறுறக் கெட்டா ராயின்
பின்னையும் யாரோ வென்றே பேசுவார் ஏசு வாரே.

# பாடல்: 22 (வேதமோதிடும்)

வேத மோதிடும் வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை
மாத மூன்று மழையெனப் பெய்யுமே

# பாடல்: 23 (அரிசிவிற்றிடும்)

அரிசி விற்றிடும் அந்தணர் வெறுத்து
வரிசை தப்பிய மன்னரை விடுத்து
புருடனைக் கொன்ற பூவையைக் கடுத்து
வருகின்ற முகில்களும் வானில் விரையுமே. ???

# பாடல்: 24 (திருப்பதிமிதியா)

திருப்பதி மிதியாப் பாதம் சிவனடி வணங்காச் சென்னி

இரப்பவர்க் கீயாக் கைகள் இனியசொல் கேளாக் காது
புரப்பவர் விழிகள் கண்ணீர் பொழிதரப் போகாத் தேகம்
இருப்பினும் பயன்தான் என்னே எரிப்பினு மில்லை தானே

## பாடல்: 25 (தன்னுடலுக்)

தன்னுட லுக்கொன் றீந்தால் தக்கதோர் பலம தாகும்
மின்னியல் வேசிக் கீந்தால் மெய்யினில் வியாதி யாகும்
மன்னிய உறவுக் கீந்தால் மற்றது மயக்கமாகும்
அன்னிய ரற்றோர்க் கீந்தா லாருயிர்க் குதவி யாமே.

## பாடல்: 26 (படியும்பொழுதே)

படியும் பொழுதே வதைத்திடும் பச்சைநா வியைநம்பலாம்
பழியறிந்தும் வழிமறித்திடும் பழைய கள்ளரை நம்பலாம்
கொடிய மதத்துடன் வளர்த்திடும் குஞ்சரத்தையும் நம்பலாம்
குறும்புபேசி நகைத்திடும் குமரர் தம்மையும் நம்பலாம்
கடையில்கணக் கெழுதிடும் கணக்கர் தம்மையும் நம்பலாம்

காக்கைபோல் விழிபார்த்திடும் காணி யாளரை நம்பலாம்
நடைகுலுக் கிமுக மினுக்கி நகைநகைத்திடு மாதரை
நம்பொணாதுமெய் நம்பொணாது நம்பொணாத மெய்யாகுமே.

## பாடல்: 27 (வண்டுகள்)

வண்டுக ளிருந்திடின் மெல்லிசை யொலித்திடும்
தண்டமி ழிருந்திடின் சங்கமாய்ச் சிலிர்ப்புறும்
குண்டுணி யிருந்திடின் கோள்களே உதிர்ந்திடும்
பெண்டுக ளிருந்திடின் பேரிடிச் சண்டையே.

## பாடல்: 28 (கற்புடைமாத)

கற்புடை மாதராடை கவரிமான் மயிரின் கற்றை
வெற்புறு வேங்கையின் றோல் வீரன்கை விளங்கு கூர்வேல்
அற்பர்தம் பொருள்கள் தாமு மவரவ ரிறந்த பின்னே

பற்பலர் கொள்வர் தானே பாரினி லுண்மை யாமே.

## பாடல்: 29 (வீணர்தான்)

வீணர் தாந்தங்கம் பூண்டால் வெறும் மேற்பூச் சென்பார்
பூணுவார் மேற்பூச்சிட்டால் பொருந்திய தங்க மென்பார்
காணவே பனையின் கீழ்பால் பருகினுங் கள்ளே யென்பார்
மாண்புறின் புல்லர் பேச்சும் மானிடர் மெச்சி டாரே.

## பாடல்: 30 (மூப்பிலாக்)

மூப்பிலாக் குமரி வாழ்க்கை முனிவிலா அரசன் வீரம்
காப்பிலா விளைச்சல் பூமி கரையிலா திருக்கு மேரி
கோப்பிலாக் கொண்ட கோலம் குருவிலா துற்ற கல்வி
ஆப்பிலாச் சகடு போல அழியுமென் றுரைக்க லாமே.

# பாடல்: 31 (அரவினை)

அரவினை யாட்டுவாரும் அருங்களி றோட்டு வாரும்
இரவினில் தனிப்போ வாரு மிரையுநீர் நீந்து வாரும்
விரைசெறி குழலி யான வேசையை விரும்பு வாரும்
அரசனைப் பகைத்திட் டாரு மாருயி ரிழப்பர் தாமே.

# பாடல்: 32 (வாழ்வதுவந்த)

வாழ்வது வந்த போது மனந்தனில் மகிழவேண்டா
தாழ்வது வந்த தானால் தளர்வரோ தக்கோர் மிக்க
ஊழ்வினை வந்த தானால் ஒருவரால் விலக்கப் போமோ
ஏழையா யிருந்தோர் பல்லக் கேறுதல் கண்டி லீரோ.

# பாடல்: 33 (பருப்பதம்போல்)

பருப்ப தம்போல் நிறைந்திடு நவமணிப் பரிசுகள் கொடுத்தாலும்
விருப்ப நீங்கிய கணவரைத் தழுவுதல் வீணதாம் விரிமணத்து
குருக்கொள் சந்தனக் குழம்பினை யன்போடு குளிர்தர அளித்தாலுஞ்
செருக்கு மிஞ்சிய வற்பர்தந் தோழமை செய்வ தாகாதே.

## பாடல்: 34 (பெருத்திடு)

பெருத்திடு செல்வமாம் பிணிவந் துற்றிடில்
உருத்தெரி யாமலே ஒளிம ழுங்கிடும்
மருந்துள தோவெனில் வாகடத் தில்லை
தரித்திர மென்னுமோர் மருந்தின் தீருமே.

## பாடல்: 35 (அத்தியின்மலரும்)

அத்தியின் மலரும் வெள்ளை யாக்கைகொள் காக்கை தானும் ??
பித்தர்தம் மனமும் நீரில் பிறந்தமீன் பாதந் தானும்
அததன்மால் பிரம தேவ னாலள விடப்பட் டாலும்
சித்திர விழியார் நெஞ்சம் தெளிந்தவ ரில்லை கண்டீர்.

## பாடல்: 36 (கதலி வீரர்

கதலி வீரர் களத்திடை வையினும்
குதலை வாயில் குழவிகள் வையினும்
மதன லீலை மங்கையர் வையினும்
இதமுறச் செவிக்கின் பம்வி ளையுமே.

## பாடல்: 37 (மானமுள்ளோர்கள்)

மானமுள் ளோர்க ளென்றும் மயிரறின் உயிர்வா ழாத
கானுறு கவரி மான்போல் கனம்பெறு புகழே பூண்பர்
மானமொன் றில்லார் தானே மழுங்கலாய்ச சவங்க ளாகி

யீனமாங் கழுதைக் கொப்பா யிருபபரென் றுரைக்க லாமே.

## பாடல்: 38 (ஆசாரம்செய்)

ஆசாரம் செய்வா ராகி லறிவொடு புகழு முண்டாம்
ஆசாரம் நன்மை யாகு மவனியில் தேவ ராக்கும்
ஆசாரஞ் செய்யா ராகி லறிவொடு புகழு மற்று
பேசார்போ லூமை யாகிப் பிணியொடு நரகில் வீழ்வார்.

## பாடல்: 39 (செல்வம்வந்துற்)

செல்வம் வந்துற்ற போது தெய்வமே நினைவு கொள்ளார்
சொல்வதை யறிந்து சொல்லார் சுற்றமுந் துணையும் பேணார்
வெல்வதே கரும மல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவும் பாரார் வாழுமிம் மண்ணில் மாந்தர்.

# விவேகசிந்தாமணி

## பாடல்: 41 (கொண்டநற்)

கொண்டநற் கனவுக ளோடு குணமிலாக் கோதை மாரைக்  ??
கண்டுவிண் டிருப்ப தல்லால் கனவிலும் புல்ல ஒண்ணாது
உண்டெனு மதுவை யுண்ண வோவியப் பூவில் வீழ்ந்த
வண்டினம் பட்ட பாடு வருந்திடப் படுவர் தானே.

## பாடல்: 42 (மயில்குயில்)

மயில்குயில் செங்கா லன்னம் வண்டுகண் ணாடி பன்றி
அயிலெயிற் றரவு திங்க ளாதவ னாழி கொக்கோடு

உயர்விண் கமலம் பன்மூன் றுறுகுண முடையோர் தம்மை
யியலுறு புவியோர் போற்று மீசனென் றெண்ண லாமே.

## பாடல்: 43 (தெருளிலாக்)

தெருளிலாக் கலைஞர்தம் தேர்விலாத் தன்மையும்
பொருளிலிலா வறிஞர்தம் பொறியெலா மடக்கமும்
அருளிலா வறிஞர்தம் அசைவிலா மௌனமும்
கருவிலா மங்கையின் கற்பொ டொக்குமே.

## பாடல்: 44 (சந்திரனில்லா)

சந்திர னில்லா வானம் தாமரை யில்லாப் பொய்கை
மந்திரி யில்லா வேந்தன் மதகரி யில்லாச் சேனை
பண்டித ரில்லாச் சங்கம் பாலக ரில்லா வாழ்வு
தந்திக ளில்லா வீணை தனமிலா மங்கை போலாம்.

# பாடல்: 45 (குரைகடல்)

குரைகடல் வறுமையும் குறத்தி உண்மையும்
நரையற மருந்தையுண் டிளமை நண்ணலும்
விரைசெறி குழலிவேசி ஒருவனை யெண்ணலும்
அரைசரின் அன்பறா வாக்கமு மரியதே.

# பாடல்: 46 (பொருளில்லார்க்)

பொருளில்லார்க் கின்ப மில்லை புண்ணிய மில்லை யென்றும்
மருவிய கீர்த்தி யில்லை மைந்தரின் பெருமை யில்லை
கருதிய கரும மில்லை கதிபெறு வழியு மில்லை
பெருநிலந் தனில்சஞ் சாரப் பிரேதமாய்த் திரிகு வாரே.

# பாடல்: 47 (தூம்பினில்)

தூம்பினில் புதைந்த கல்லும் துகளின்றிச் சுடர்கொ டாது
பாம்புக்குப் பால்வார்த் தென்றும் பழகினும் நன்மை தாரா
வேம்புக்குத் தேன்வார்த் தாலும் வீணதாம் கசப்பு மாறா
ஆம்பல நூல்கற் றாலு மற்பர்தான் மேலோ ராகார்.

## பாடல்: 48 (தேளதுதீயில்)

தேளது தீயில் வீழ்ந்தால் செத்திடா தெடுத்த பேரை
மீளவே கொடுக்கி னாலே மீண்டுமே கொட்டல் போலே
ஏளனம் பேசித் தீங்கை யென்றுமே செய்து வாட்டும்
கோளினர் தமக்கு நன்மை செய்வது குற்ற மாமே.

## பாடல்: 49 (அறிவுளோர்)

அறிவுளோர் தம்மை நாளு மரசருந் தொழுது வாழ்வார்
நிறையொடு புவியி லுள்ளோர் நேசமாய் வணக்கஞ் செய்வார்
நெறியுளோ ரவர்க்கி யாதோர் நலிவுதான் வருமே யாகில்
சிறியரென் றிகழ மாட்டார் குறுமதி யற்றோர் தானே.

## பாடல்: 50 (குருவுபதேச)

குருவுப தேச மாதர் கூடிய வின்பந் தன்பால்
மருவிய நியாயங் கல்வி வயது தான்செய்த தர்மம்
அரிய மந்திர விசார மாண்மை யிவைக ளெல்லாம்
ஒருவருந் தெரிய வொண்ணா துரைத்திடி லழிந்து போமே.

## பாடல்: 51 (இடுக்குற)

இடுக்குற வறுமை யாகி யேற்பவர்க் கிசைந்த செல்வங்
கொடுப்பதே மிகவு நன்று குற்றமே யின்றி வாழ்வார்
தடுத்ததை விலக்கி னோர்க்குத் தக்கநோய் பிணிக ளாகி
உடுக்கவே உடையு மின்றி யுண்ணவு மருமை யாமே.

## பாடல்: 52 (மெய்யதைச்)

மெய்யதைச் சொல்வாராகில் விளங்கிடும் மேலும் நன்மை
வையக மதனைக் கொள்ளும் வானுளத் தேவ ராவார்
பொய்யதைச் சொல்வா ராகில் போசன மற்ப மாகும்
நொய்யவ ரிவர்க ளென்று நோக்கிடா ரறிவுள்ளோரே.

## பாடல்: 53 (தந்தையுரை)

தந்தையுரை தட்டினவன் தாயுரை யிகழ்ந்தவன்
அந்தமுறு தேசிகர்தம் மாணையை மறந்தவன்
சந்தமுறு வேதநெறி தாண்டின இந்நால்வர்
செந்தழலின் வாயினிடை சேர்வது மெய்யாமே.

# பாடல்: 54 (நாரிகள்வழக்கா)

நாரிகள் வழக்கா னாலும் நடுவறிந் துரைப்பார் சுத்தர்
ஏரிபோல் பெருகி மண்மே லிருகண்ணும் விளங்கி வாழ்வார்
ஓரமே சொல்வா ராகி லோங்கிய கிளையு மாண்டு
தீரவே கண்ணி ரண்டுந் தெரியாது போவர் தாமே.

# பாடல்: 55(ஏரிநீர்நிறைந்த)

ஏரிநீர் நிறைந்த போதிருந் திட்ட பட்சி யெல்லாம்
மாரிநீர் வறண்ட போது மற்றவை யிருப்ப துண்டோ
பாரினை யாளும் வேந்தன் பரிவுற மறந்தா னானால்
யாருமே நிலையில் லாம லவரவ ரேகு வாரே.

# பாடல்: 56 (மண்ணார்சட்டி)

மண்ணார் சட்டி கரத்தேந்தி மரநாய் கௌவும் காலினராய்
அண்ணாந் தேகி யிரப்பாரை யறிந்தோ மறிந்தோ மம்மம்மா
பண்ணார் மொழியார் பாலடிசில் பைம்பொற் கலத்தில் பரிந்தூட்ட
உண்ணா நின்றபோ தொருவா யுதவா மாந்த ரிவர்தாமே.

## பாடல்: 57 (மண்ணுள்மாந்தர்)

மண்ணுள் மாந்தர் பாவம் மன்னரைச் சென்று சேருந்
திண்டிரள் மன்னர் பாவத் தீங்குமந் திரியைச் சேருந்
தொண்டர்கள் செய்த பாவந் தொடர்ந்துதம் குருவைச் சேருங்
கண்டன மொழியாள் பாவங் கணவர்க்குச் சேருந் தானே.

## பாடல்: 58 (நற்குணமுள்ள)

நற்குண முள்ள வேந்தை நயந்து சேவித்த லொன்று
பொற்புடை மகளி ரோடு பொருந்தி யேவாழ்த லொன்று
பற்பல ரோடு நன்னூல் பகர்ந்து வாசித்த லொன்று

சொற்பெறு மிவைகள் மூன்று மிம்மையிற் சொர்க்க மாமே.

## பாடல்: 59 (நிட்டையிலே)

நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த பெரியோர்கள் நிமலன் றாளைக்
கிட்டையிலே யடுத்துமுத்தி பெறுமளவும் பெரியசுகங் கிடைக்கும் காம
வெட்டையிலே மதிமயங்குஞ் சிறுவருக்கு மணம்பேசி விரும்பித் தாலி
கட்டையிலே தொடுத்துசுடு காட்டினிலே கிடத்துமட்டுங் கவலை தானே.

## பாடல்: 60 (ஆவீனமழை)

ஆவீன மழைபொழிய வில்லம் வீழ வகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ

மாவீரம் போகுதென்று விதைகொண் டோட வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ள
கோவேந்த ருழுதுண்ட கடமை கேட்கக் குருக்கள்வந்து தட்சணைக்குக் குறுக்கே நிற்கப்
பாவாணர் கவிபாடிப் பரிசு கேட்கப் பாவிமகன் படுந்துயரம் பார்க்கொ ணாதே.

விவேகசிந்தாமணி01-20

விவேகசிந்தாமணி 21-40
விவேகசிந்தாமணி 81-100
விவேகசிந்தாமணி
விவேகசிந்தாமணி
[[]] [[]] [[]] [[]]

# விவேகசிந்தாமணி

## பாடல்: 61 (தாய்பகை)

தாய்பகை யன்புஅற் றாளேல் தந்தைபகை கடனாளி யானால்
பேய்பகை மனைவி நல்ல மதியினை யிழந்தா ளாகில்
வாய்பகை யறிவுண் டாக்கு மறநூலைக் கல்லா விட்டால்
சேய்பகை சிறுமைக் காகுஞ் செந்நெறி யொழுகா விட்டால்.

## பாடல்: 62 (நிலைதளர்ந்திட்ட)

நிலைதளர்ந் திட்ட போது நீணிலத் துறவு மில்லை ??
சலமிருந் தகன்ற போது தாமரைக் கருக்கன் கூற்றம்
பலவன மெரியும் போது பற்றுதீக் குறவாங் காற்றே
மெலியுறு விளக்கே யாகில் மாறியே வாகுங் கூற்றம்.

# பாடல்: 63 (மடுத்த)

மடுத்த பாவாணர் தக்கோர் மறையவ ரிறப்போர்க் கெல்லாம்
கொடுத்தெவர் வறுமை யுற்றார் கொடாது வாழ்ந்த வரியார் மண்மேல்
எடுத்து நாடுண்ட நீருமெ டாதகாட் டகத்து நீரும்
அடுத்த கோடையிலே வற்றி யல்லதில் பெருகுந் தானே.

# பாடல்: 64 (உணங்கியொருகால்)

உணங்கி யொருகால் முடமாகி யொருகண் ணின்றிச் செவியிழந்து
வணங்கி நெடுவா லறுப்புண்டு மன்னு முதுகில் வயிறொட்டி
அணங்கு நலிய மூப்பெய்தி யகல்வா யோடு கழுத்தேந்தி
சுணங்கன் முடுவல் பின்சென்றால் யாரைக் காமன் துயர்செய்யான்.

# பாடல்: 65 (கல்மனப்பார்ப்பார்)

கல்மனப் பார்ப்பார் தம்மைப் படைத்துக் காகத்தை யென்செயப் படைத்தான்
துன்மதி வணிகர் தம்மைப் படைத்துச் சோரரை யென்செயப் படைத்தான்
வன்மனவடுகர் தம்மைப் படைத்து வானரம் என்செயப் படைத்தான்
நன்மனை தோறும் பெண்ணைப் படைத்து நமனையு மென்செயப் படைத்தானோ.

# பாடல்: 66 (கொண்டுவிண்)

கொண்டு விண்படர் கருடன்வாய் கொடுவரி நாகம்
விண்ட நாகத்தின் வாயினில் வெகுண்டவன் தேரை
மண்டு தேரையின் வாயினி லகப்படு வண்டு
பண்டு தேனுக ரின்பமே மானிட ரின்பம்.

# பாடல்: 67 (கற்பூரப்)

கற்பூரப் பாத்திகட்டிக் கத்தூரி யெருப்போட்டுக் கமழ்நீர் பாய்ச்சிப்
பொற்பூர வுள்ளியினை விதைத்தாலு மதன்குணத்தைப் பொருந்தக் காட்டும்?
சொற்பேதை யருக்கறிவிங் கினிதாக வருமென்றே சொல்லி னாலும்?
நற்போதம் வாராதங் கவர்குணமே மேலாகி நடக்குந் தானே.

# பாடல்: 68 (மருவுசந்தனக்)

மருவு சந்தனக் குழம்பொடு நல்லணி நலம்பெற வணிந்தாலும்
சருவ சந்தேக மனமுள மாதரைத் தழுவலு மாகாதே

பருவ தங்கள்போல் பலப்பல நவமணிப் பைம்பொனைத் தந்தாலும்
கருவ மிஞ்சிய மானிடர் தோழமை கிட்டினுங் கூடாதே.

## பாடல்: 69 (தன்னைத்தான்)

தன்னைத்தான் புகழ்வோரும் தன்குலமே பெரிதெனவே தான்சொல் வோரும்
பொன்னைத்தான் தேடியறம் புரியாம லவைகாத்துப் பொன்றி னோரும்
மின்னலைப்போல் மனையாளை வீட்டில் வைத்து மினுக்கிசுகம் விரும்புவோரும்
அன்னைபிதா பாவலரைப் பகைக்கும் பேரு மறிவிலாக் கசடராமே.

## பாடல்: 70 (பெண்டுசொல்)

பெண்டுசொல் கேட்கின்ற பேயர்களே குணமூடப் பேடி யாவார்
முண்டைகளுக் கிணையில்லார் முனைவீர புருடரென மொழியொ ணாது
மண்ணுலக முதிப்பாருள் கீர்த்தியற மின்னதென வுணர்த லில்லார்
அண்டினவர் தமைக்கெடுப் பாரழிவழக்கே சொல்வத வரறிவு தானே.

# பாடல்: 71 (வில்லதுவளைந்)

வில்லது வளைந்த தென்றும் வேழந்தா னுறங்கிற் றென்றும்
வல்லியம் பதுங்கிற் றென்றும் வளர்கடா பிந்திற் றென்றும்
புல்லர்தம் சொல்லுக் கஞ்சிப் பொறுத்தனர் பெரியோ ரென்றும்
நல்லதென் றிருக்க வேண்டா நஞ்செனக் கருத லாமே.

# பாடல்: 72 (நிலமதில்)

நிலமதிற் குணவான் றோன்றி ணீள்குடித் தனரும் வாழ்வர்
தலமெலாம் வாசம் வீசுஞ் சந்தன மரத்துக் கொப்பாம்
நலமிலாக் கயவன் றோன்றி னக்குடி தேசம் பாழாம்
குலமெலாம் வெட்டிச் சாய்க்குங் கோடரிக் காம்பு போலாம்.

## பாடல்: 73 (அருமையும்)

அருமையும் பெருமை தானு மறிந்துடன் படுவர் தம்மால்
இருமையு மொருமை யாகி யின்புறற் கேது வுண்டாம்
பரிவிலாச் சகுனி போலப் பண்புகெட் டவர்கள் நட்பால்
சிறுமையில் நரக மெய்து மேதுவே யாகு மன்னோ.

## பாடல்: 74 (ஒருவனே)

ஒருவனே யிரண்டு தோற்ற மூன்பொதி யாகத் தோன்றும்

உருவமே யொன்றென் றாகு மருவமாய்ப் புகழென் றாகும்
மருவிய யாக்கை யிங்கே மாய்ந்திடு மற்று மாண்பு
திறமதா யுலக மேற்றச் சிறந்துபின் னிற்கு மன்றே.

## பாடல்: 75 (வேலியானது)

வேலி யானது பயிரை மேய்ந்தால்
கால னானவ னுயிரைக் கவர்ந்தால்
ஆல மன்னையர் பாலர்க் கருத்தினால்
மேலிட வோர்ந்திதை யார்கொலோ விலக்குவர்.

## பாடல்: 76 (அறம்கெடும்)

அறங்கெடும் நிதியுங் குன்று மாவியு மழியு மியாக்கை
நிறங்கெடும் மதியும் போகி நீண்டதோர் நரகிற் சேர்க்கும்

மறங்கெடு மறையோர் மன்னர் வணிகர்நல் உழவோரென்னுங்
குலங்கெடும் வேசி மாதைக் குலவிட விரும்பு வோர்க்கே.

## பாடல்: 77 (காமமே)

காமமே குலத்தினையு நலத்தினையுங் கெடுக்க வந்த களங்கம்
காமமே தரித்திரங்க ளனைத்தையுந் தங்க வைக்குங் கடாரம்
காமமே பரகதிக்குச் சென்றிடாது வழியடைக்குங் கபாடங்
காமமே யனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியும் கத்தி யாமே.

## பாடல்: 78 (அறங்கெடும்)

அறங்கெடும் நிதியங் குன்று மாவியு மழியு மியாக்கை
நிறங்கெடும் மதியும் போகி நீண்டதோர் நரகிற் சேர்க்கும்
மறங்கெடு மறையோர் மன்னர் வணிகர்நல் லுழவோ ரென்னுங்
குலங்கெடும் வேசி மாதைக் குலவிட விரும்பு வோர்க்கே.

## பாடல்: 79 (காமமே)

காமமே குலத்தினையு நலத்தினையுங் கெடுக்கவந்த களங்கங்
காமமே தரித்திரங்க ளனைத்தையுந் தங்கவைக்குங் கடாரங்
காமமே பரகதிக்குச் சென்றிடாது வழியடைக்குங் கபாடங்
காமமே யனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியுங் கத்தியாமே.

## பாடல்: 80 (கல்லாத)

கல்லாத மாந்தரையுங் கடுங்கோப மன்னரையுஞ் சாலத் தேர்ந்து
சொல்லாத வமைச்சரையுஞ் சுகந்தராத் தேவரையுஞ் சுருதி நூலில்
வல்லாத வந்த ணரையும் வரிந்தானுட னெந்நாளும் வலதுபேசி
நல்லாள்போ லருகிருக்கும் மனைவியையு மொருநாளும் நம்பொணாதே.

பார்க்க

# விவேகசிந்தாமணி 81-100

# விவேகசிந்தாமணி

## பாடல்: 81 (தன்மானங்)

தன்மானங் குலமானந் தனைவேண்டி யடைந்தோர் தங்கள் மானம்
என்மான முடன்சமமா மென்றெண்ணி யெவரிடத்து மினிமை யான
நன்மானம் வைத்தென்று மார்வமுட னவர்களுக்கு நலஞ்செய் வோனை
மண்மாண வடைந்தோரைக் காக்கின்ற வள்ளலென வாழ்த்த லாமே.

## பாடல்: 82 (மங்கைகைகேசி)

மங்கை கைகேசி சொற்கேட்டுத் தசரதன் மரண மானான்
செங்கம லச்சீதை சொற்கேட்டுச் சீராமன் சென்றான் மான்பின்
தங்கை சூர்ப்பணகை சொற்கேட் டிராவண னிறந்து போனான்
நங்கை சொற்கேட்டாற் கேடுவரு நகைப்ப ருலகோர் தானே.

# பாடல்: 83 (தடாரிதண்ணுமை)

தடாரி தண்ணுமை பேரிகை சல்லரி யிடக்கை
படாது கூடியே யொலித்திடல் போலவிப் பாரில்
விடாது நாணகன் றன்னிய புருடனை விரும்பி
யடாது செய்தமங் கையின்வசை யொலித்திடு மன்றே.

# பாடல்: 84 (புத்திமான்)

புத்திமான் பலவா னாவான் பலமுளான் புத்தி யற்றால்

எத்தனை விதத்தி லேனு மிடரது வந்தே தீரும்
மற்றொரு சிங்கந் தன்னைக் குறுமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றில் சாயல் காட்டிய வுவமை போலே.

## பாடல்: 85 (அன்னையே)

அன்னையே யனைய தோழி வன்புட னிருக்கு மாதே
உன்னையோ ருண்மை கேட்பே னுணர்ந்திட வுரைத்தல் வேண்டும்
என்னையே புணரு வோர்க ளெனக்கு மோரின்ப நல்கிப்
பொன்னையுங் கொடுத்துப் பாதப் போதினில் வீழ்வ தேனோ.

## பாடல்: 86 (பொம்மெனப்)

பொம்மெனப் பணைத்து விம்மிப் போர்மதன் மயங்கி வீழும்
கொம்மைசேர் முலையி னாளே கூறுவேன் நன்கு கேண்மோ
செம்மையி லறஞ்செய் யாதார் செல்வந்தான் சிதற வேண்டி

நம்மையுங் கள்ளுஞ் சூதும் நான்முகன் படைத்தா னன்றோ.

## பாடல்: 87 (ஒருநான்கீரரை)

ஒருநான் கீரரரையு மொன்றே கேளாய் உண்மையாய் ஐயரையு மரையுங் கேட்டேன்
இருநான்கு மூன்றுடனே வொன்றுஞ் சொல்லாய் யிம்மொழியைக் கேட்டபடி யீந்தா யாயின்
பெருநான்கு மறுநான்கும் பெறுவாய் பெண்ணே பின்னையோர் மொழிபுகல வேண்டா மின்றே
சரிநான்கும் பத்துமொரு பதினைந் தாலே சகிக்கமுடி யாதினி யென்சகியே மானே.

## பாடல்: 88 (தேனுகர்வண்டு)

தேனுகர் வண்டு மதுதனை யுண்டு தியங்கியே கிடந்ததைக் கண்டு
தானதைச் சம்பு வின்கனி யென்று தடங்கையி லெடுத்துமுன் பார்த்தாள்
வானுறு மதியம் வந்ததென் றெண்ணி மலர்க்கரங் குவியு மென்றஞ்சிப்
போனது வண்டோ, பறந்ததோ பழந்தான் புதுமையோ விதுவெனப் புகன்றாள்.

## பாடல்: 89 (கானலைநீரென்)

கானலை நீரென் றெண்ணிக் காடுவெளி திரியு மான்போல்
வானுறு யிலவு காத்த மதியிலாக் கிள்ளை யேபோல்
தேனினை யுண்டு தும்பி தியங்கிய தகைமை யேபோல்
நானுனை யன்ப னென்று நாளையும் போக்கி னேனே.

## பாடல்: 90 (தங்குமன்பின்)

தங்கு மன்பின் மணவாளன் றன்னை நினைக்கும் போதெல்லாம்
பொங்குங் கடலு முறங்காது, பொழுதோ நாளும் விடியாது

திங்க ளுறங்கும் புள்ளுறங்குந் தென்றலுறங்கும் சிலகாலம்
எங்கு முறங்கு மிராக்கால மென்கண் ணிரண்டு முறங்காவே.

## பாடல்: 91 (சொல்லுவார்)

சொல்லுவார் வார்த்தை கேட்டுத் தோழைமை யிகழ்வார் புல்லர்
நல்லவர் விசாரி யாமல் செய்வரோ நரிசொற் கேட்டு
வல்லரி யெருதுங் கூடி மாண்டதோர் கதையைப் போலப்
புல்லிய ரொருவ ராலே போகுமே யனைத்து நாசம்.

## பாடல்: 92 (அன்னம்பழித்த)

அன்னம் பழித்தநடை யாலம் பழித்தவிழி யமுதம் பழித்த மொழிகள்
பென்னம் பெருத்தமுலை கன்னங் கறுத்தகுழல் சின்னஞ் சிறுத்த விடைப்பெண்

என்னெஞ் சுறுத்த வவடனெஞ்சு கற்றகலை யென்னென் றுரைப்ப தினிநான்
சின்னஞ் சிறுக்கி யவள்வில் லங்க மத்தனையுந் தெய்வங் களுக்கபயமே.

## பாடல்: 93 (உண்ணல்)

உண்ணற் பூச்சூட னெஞ்சுவத் தலொப்பனை
பண்ணலெல் லாமவர் பார்க்கவே யன்றோ
அண்ணலின் பிரிவினை யறிந்துந் தோழினீ
மண்ண வந்தனை யிதுமடமை யாகுமால்.

## பாடல்: 94 (பூதலத்தில்)

பூதலத்தில் மானிடராய்ப் பிறப்ப தரிதெனப் புகல்வர் பிறந்தோர் தாமும்
ஆதிமறை நூலின் முறையருள் கீர்த்தியாந் தலங்கள் பண்பாய்ச் சென்று

நீதிவழு வாத வகைவழக் குரைத்து நல்லோரை நேசங் கொண்டு
காதவழி பேரில்லார் கழுதை யென்றே கருதிடுவர் பாரில் தானே.

## பாடல்: 95 (வல்லியந்தனைக்)

வல்லியந் தனைக்கண் டஞ்சி மரந்தனி லேறும் வேடன்
கொல்லிய பசியைத் தீர்த்து ரட்சித்த குரங்கைக் கொன்றான்
நல்லவன் றனக்குச் செய்த நலமது மிக்க தாகும்
புல்லர்க்கு நன்மை செய்தாற் போக்குவ ருயிரைத் தானே.

## பாடல்: 96 (மாகமாமேடை)=

மாகமா மேடை மீதில் மங்கைநின் றுலாவக் கண்டு
ஏகமா மதியென் றெண்ணி யிராகுவந் துற்ற போது
பாகுசேர் மொழியி னாளும் பதறியே பாதம் வாங்கத்

தோகைமா மயிலென் றெண்ணித் தொடர்ந்தரா மீண்ட தன்றே.

## பாடல்: 97 (அருகில்வர)

அருகில்வர வருகில்வர வருகில்வர வுருகும்
கரியகுழல் மேனியிவள் சாயல்மயில் மறுகும்
பெரிதுதனம் சிறிதுயிடை பேதையிவ ளையோ
தெருவிலிவள் செல்லுகையிற் றுள்ளுமுளந் தானே.

## பாடல்: 98 (குரங்குநின்)

குரங்கு நின்று கூத்தாடிய கோலத்தைக் கண்டே
அரங்கு முன்புநா யாடிக்கொண் டாடியது போல
கரங்கள் நீட்டியே பேசிடும் கசடரைக் கண்டு
சிரங்க ளாட்டியே மெச்சுத லறிவிலார் செய்கை.

# பாடல்: 99 (இந்திரன்பெருமை)

இந்திரன் பெருமை குன்று மிறையவர் மகிமை குன்றும்
மந்தர மலைக ளாடு மறுகயல் வறுமை யாகும்
சந்திர சூரியன் சாயும் சகத்தினிற் றேசு மாறும்
அந்தணர் கருமங் குன்றி லவனியில் வாழ்வார் யாரே.

# பாடல்: 100 (பண்புளருக்)

பண்புளருக் கோர்பறவை பாவத்திற் கோரிலக்கம்
நண்பிலரைக் கண்டக்கால் நல்லிருக்கை- திண்புவியை
யாள்வா ரழகிய சொக்கர்க் கரவம்
நாடோ றுமேநன் னிலம்.

# விவேகசிந்தாமணி முற்றும்